BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்

An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியங்களில் படிமக் கூறுகள்
# Figurative elements in Sangam literature

முனைவர் தெ. இந்துமதி

உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், தமிழ்த் துறை, ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை.

**Dr. D. Indumathi**

Assistant Professor and Head, Dept of Tamil, Avichi College of Arts and Science, Chennai.

**Abstract**

The Sangam literature, known for its profound emotional and cultural depth, goes beyond mere descriptions of nature to portray it as an integral extension of human emotions, dividing it into Akam (interior) and Puram (exterior) realms. This paper explores the imagistic elements (padimakoorugal) in Sangam poetry, focusing on how imagery functions as a powerful literary device to express human experiences and inner feelings. The study highlights that, unlike later Tamil literary works, Sangam poems exhibit exceptional visual richness and symbolic precision. The paper discusses various forms of imagery found in Sangam texts—visual imagery, chain imagery, taste imagery, olfactory (smell) imagery, and others such as sound, touch, and symbolic imagery. Each type is illustrated with examples from Natrinai and other anthologies, showing how poets transform natural scenes—mountains, moonlight, forests, and flowers—into emotional and symbolic landscapes.By comparing these techniques with those used in modern Tamil poetry (such as in the works of Abdul Rahman), the study emphasizes the continuity and evolution of imagistic representation in Tamil literature. The paper concludes that the vivid sensory and symbolic imagery of Sangam poetry not only beautifies the verse but also deepens its emotional resonance, making it a timeless model for poetic expression.

**Keywords :**Sangam literature,culturaldepth, Akam and Puram , imagistic elements

**ஆய்வு சுருக்கம்**

அழுத்தமான உணர்வுப் பூர்வத்தையும் கலாசார ஆழத்தையும் கொண்ட சங்க இலக்கியம், இயற்கையை வெறும் விவரிப்பாக அல்லாது, மனித உணர்வுகளின் ஓர் அங்கமாகக் காட்டுகிறது. இது அகத்திணை மற்றும் புறத்திணை என இருபகுப்புகளாகப் பிரிக்கப்படுகிறது. இக்கட்டுரை, சங்கப் பாடல்களில் காணப்படும் படிமக் கூறுகளை (படிமக் கூறுகள்) ஆய்வு செய்கிறது. இவைகள் மனித அனுபவங்களையும் உள்ளார்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வலிமையான இலக்கிய கருவியாக செயல்படுகின்றன. சங்கப் பாடல்களுக்கு பின்பு வந்த தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சங்கப் பாடல்கள் மிகவும் காட்சிப்படப் பளிச்சிடும் தன்மையையும் குறியீட்டு துல்லியத்தையும் காட்டுகின்றன என்பதையே இக்கட்டுரை வலியுறுத்துகிறது.இக்கட்டுரை, சங்க இலக்கியங்களில் காணப்படும் பல்வேறு வகையான படிமங்களைப் பற்றி விவரிக்கிறது. காட்சி படிமம், தொடர் படிமம், சுவைச் சொற்கள், மண்வாசனைப் படிமம் மற்றும் ஒலி, தொடுதல், குறியீட்டு படிமங்கள் போன்றவை. இவை அனைத்தும் நற்றிணை மற்றும் பிற தொகுப்புகளிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகின்றன. இந்தப் பாடல்களில் இயற்கைக் காட்சிகள், மலைகள், நிலவெளி, காடுகள் மற்றும் பூக்கள் மன உணர்வுகளும் குறியீடுகளும் நிரம்பிய காட்சிகளாக மாற்றப்படுகின்றன. இந்த தொழில் நுட்பங்கள், அப்துல் ரஹ்மான் போன்ற நவீன தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளுடன் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன. இதனால், தமிழ்க் கவிதையில் படிமங்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் தெளிவாகப் புரிகின்றன. கட்டுரை முடிவில், சங்கக் கவிதைகளில் காணப்படும் உணர்வுப் பூர்வமான உணர்ச்சிப் படிமங்கள், பாடல்களின் அழகை மட்டுமல்லாமல் அதன் உணர்ச்சிப் பாதிப்பையும் ஆழமாக்குகின்றன எனக் கூறப்படுகிறது. எனவே, இவை காலத்தைக் கடந்த கவிதை மையத்தின் ஒரு மாதிரியாகத் திகழ்கின்றன.

**குறிச் சொற்கள் :** சங்க இலக்கியம், கலாசார ஆழம், அகமும் புறமும், படிமக் கூறுகள்

**முன்னுரை**

தன்னுணர்ச்சி பாடல்களான சங்க இலக்கியங்கள் இயற்கையை வெறும் இயற்கையாக மட்டும் பார்க்காமல் அவற்றை அகம்புறம் எனப் பிரித்து மனித உணர்ச்சிகளின் வெளியீட்டு களங்கலாக அமைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் வெறும் இயற்கை உயிரினங்களை மட்டும் பாடாமல் இலக்கியத்தில் பல்வேறு வகையான கருத்து மற்றும் காட்சிப் புலம்பாட்டிற்கான அடித்தளங்கள் ஆகவும் குறியீட்டு படிமங்கலம் பலவும் அமைந்துள்ளன. இவற்றில் குறிப்பாக குறியீட்டு படிவம் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளன . எனினும் படிவம் எவ்வாறு சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாக அமைகின்றது.

இயற்கையின் பிற படைப்புகள் ஆகிய விலங்குகளையும் மரம் செடி கொடிகளாகிய தாவரங்களையும் மலை காடு வயல் கடல் முதலிய நிலப்பிரிவுகளையும் சூரியன் சந்திரன் விண்மீன் நட்சத்திரங்கள் முதலிய உயிரற்ற கோள்களையும் சங்க இலக்கியங்கள் மிக அழகாக பாடி உள்ளன. எனினும் பழந்தமிழ் இலக்கியங்கள் ஆன சங்க இலக்கியங்கள் பிற்கால இலக்கியங்களில் பயன்படுத்துகின்ற காட்சிகளைவிட மிக அழகாக காட்சிகளை வெளிப்படுத்தி உள்ளது என்பது தான் இயக்கத்தக்க விஷயமாக உள்ளது. குறிப்பாக சங்க இலக்கியங்கள் படிமக் காட்சியை மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளன.

**படிமம்**

சொர்க்களாய் நெஞ்சை திரையில் வரையும் ஓவியம் தான் படிவம் என்பது வெறும் வர்ணனை கூட படிவம் தான் ஆனால் உவமை, உருவகம், தொண்ணும் அடங்கிய சொற்களால் உருவாக்கப்படும் சொல் ஓவியம் சிறந்த படிமமாக காணப்படுகின்றது .உணர்வை மிகுதியாக தூண்டும் பல பொருள் தரும் சுவை உண்டாகும் இயக்கமுள்ள ஓவியமாக உயிருடன் விளங்குவது தான் படிமமாகும். இதை அப்துல் ரகுமான் தனது கவிதைகள் மூலம் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார். படிவம் என்பதை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை பின்வரும் சாவி இருக்கும் வரை என்ற கவிதையில் கூறி இருக்கிறார்.

*ஞாபக முட்கள்*
*காயங்களை சுட்டி*
*வட்டமிடும்*
*என் ஏகாந்தத்தின்*
*இதயத் துடிப்பாக*
*பிரிந்து சென்ற உன்*
*காலடி ஓசை (பால்வீதி )*

இக்கவிதை பிரிந்து சென்ற காதலியின் காலடி ஓசையை பற்றியது பிரிந்து சென்ற பின் நினைவெல்லாம் அந்த காலடி ஓசை தான் தனிமையின் இதயத் துடிப்பாகிறது . அது ஒரு கடிகாரத்தில் டிக்டிக் ஓசையாகிறது என்பதை மிக அழகாக எடுத்து கூறி இருக்கிறார் அப்துல் ராகுமான். மேலும் மனமே ஒரு கடிகாரமாகிவிடுகிறது. குத்தி உறுதி தொலைத்துக் கொண்டே இருக்கும் ஞாபகங்கள் அதன் முட்கள் நெஞ்சின் புண்கள் தான் நேரம் காட்டும் பெண்கள் நினைவு முட்கள் காயங்களின் மேம்பட்டமிட்டு வலியை மேலும் விதிப்படுத்துகின்றன. இந்த வலி துன்பம் எதுவரை கடிகாரம் ஓடும் வரை கடிகாரம் எதுவரை ஓடும் சாவி இருக்கும் வரை காதலின் உறுதியை பிரிவின் வலிமையை நம்முன்னால் காட்டுகின்றது இந்த படிமம். இப்படி புதுக்கவிதைகளில் பயன்படுத்துகின்ற படிம வகையினை நாம் சங்க இலக்கியத்திலேயே அதிகமாக காணமுடிகின்றது. அதில் சில வடிவங்களை மட்டும் நாம் பின்வருமாறு காணலாம்.

**சங்க இலக்கியத்தில் படிமக் கூறுகள்**

கண் எனும் புலன் கண்டவகையில் படைக்கப்படும். கவிதை காட்சிப் படிகமாகிறது. இரண்டு காட்சிகளில் ஒன்று உவமையாகவும் மற்றொன்று உவமேயாகவும் அமையும். இதுவன்றி இரண்டு காட்சிகளின் தொடர்பில் உவமை இன்றியே ஒன்றின் காட்சி தோன்றிய நிலையில் எண்ணப்படும் அருங்காட்சியம் படைப்பும் உண்டு. இம்முறையிலான சங்கப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. சான்றாக,

*குன்று ஊர் மதியம் நோக்கி நின்று நினைந்து*
*உள்ளினென் அல்லெனோ யானே முள் எயிற்றுத்*
*திலகம் தைஇய தேங் கமழ் திரு நுதல்*
*எமதும் உண்டு ஓர் மதிநாள் திங்கள்*
*உறாு குரல் வெவ் வளி எடுப்ப நிழல் தப*
*உலவை ஆகிய மரத்த*
*கல் பிறங்கும் உயர் மலை உம்பரஃது எனவே?*
*(நற்றிணை 62:4-10)*

எனும் அடிகளில் புலப்பட்ட காட்சி பின்வருமாறு,

வறண்ட காட்டில் சென்று கொண்டிருக்கிறான் தலைவன் . குன்றின் மேல் ஊர்ந்து கொண்டிருப்பதைப் போல முழுநிலவானது இருப்பதை காண்கின்றான். அதனை நின்று பார்க்கின்றான் நினைத்து சொல்லுகின்றான். கண்டதால் தான் நினைத்ததை ஏற்றிய தலைவியின் முகத்தை தமக்கு எதிரே இருக்கிற முழுநிலவாக காணுகின்றான் தலைவன்.முள் போன்ற பற்கள் திலகமிட்ட அழகிய நெற்றி உடைய சிரித்த முகத்துடன் தலைவியின் முகம் மனக்கண்ணில் தோன்றுகிறது. அவள் முகம் முழுமதியாக இருக்கிறது . அந்த முகம் வேறு எங்கும் இல்லை காட்டும் உறங்கும் ஓசையும் இலை உதிர்ந்து நிழல் தராது இலை வற்றிய கொம்புகளையும் உடைய மரங்களும் கற்களும் நிறைந்த மலையின் மீது நாள் திங்களாக இங்கே இருக்கிறது அவள் முகம் என்று தான் கண்டதை அழகாக கூறுகின்றான் தலைவன். நிலவின் ஒளியில் மலையில் கொம்பற்ற மரங்களும் கற்களும் காட்சிபடுகின்றன. மலையின் மீது முழுநிலவும் காணப்படுகின்றது. இப்படி நிலவுக் காலத்தை காட்டிய பின் நிலவையே தன் தலைவின் முகமாக காணுகின்றான் தலைவன். இரண்டு காட்சிகளை இணைத்து ஒரு காட்சி படிவம் இதில் சிறப்பாக அமைந்துள்ளதை காணமுடிகின்றது. இதை காட்சியை வடிவ வகையில் காட்சிப் படுத்திய படிவமாகவும் என்பதனை உணரலாம்.

**தொடர்படிமம்.**

*இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை*
*நீலத்து அன்ன பாசிலை அகந் தொறும்*
*வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பண்*
*பொன்னின் அன்ன நறும்தாது உதிர*
*(நற்றிணை 249:1-4)*

எனும் அடிகள் புன்னை மரத்தின் கிளை, இலை, பூங்கொத்து , மகரதம் எனப் பல உறுபுகளையும் காட்சிப்படுத்தியது .அவை அனைத்தும் வண்ண உவமைப் படிமங்களாக காட்டப்பட்டுள்ளன .

புன்னை மரத்தின் கரிய கிளையானது இரும்பு போன்ற நிறம் உடையது. அதில் பச்சை இலையானது நீலமணி போன்ற நிறமுடையது. இலைகளைக் கடந்து உள்ள பூங்கொத்து வெள்ளி நிறமாக உள்ளது. பூவின் உள்ளே உள்ள மகரந்தம் பொன்னிறமாக உள்ளது.

பொருளின் நிற வகைகள் காட்சிப்படுத்திய இப்படியும் மிக அழகாக தொடர் அமைப்பில் அமைந்துள்ளதினால் இது தொடர் படிமமாக அமைந்துள்ளது.

**சுவைப் படிமம்**

நாவின் உணர்வானது சுவையைக் காட்சிப் படுத்துவது சுவைப் படிமம். இதனை உணர வைக்க உவமையை பயன்படுத்துவது ஒருவகை சொல்லப்படும் சொற்களாலும் பொருள்களாலும் அந்த சுவை உணர்வு வெளிப்பட செய்வது ஒருவகை இவ்விரண்டு வகைகளிலும் சுவைப் படிமம் சங்க பாடல்களில் அதிகமாக காணப்படுகின்றன.

*எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய*
*கடவுள் முது மரத்து, உடன் உறை பழகிய,*
*தேயா வளை வாய், தெண் கண், கூர் உகிர்,*
*வாய்ப் பறை அசாஅம், வலி முந்து கூகை!*
*மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்,*
*எலி வான் சூட்டொடு, மலியப் பேணுதும்;*
*( நற்றிணை 83:1-6)*

எனும் அடிகளில் ஆந்தையை அழைத்து உணவு தருவதாயும் அதனிடம் ஒரு வேண்டுகோள் விடுப்பதாகவும் காட்சிகள் அமைந்துள்ளன .

ஊரின் வழியில் உள்துறை உள்ளது பலரும் உண்ணும் நேர் கொள்ளும் அந்த தடத்தில் கடவுள் உரைகின்ற முதிய மரத்தில் வசிக்கின்ற ஆந்தை இடம் பேசுகிறாள் தலைவி. தேயாத வளைந்த வாய், தெளிவான கண், கூறிய நகம் கொண்டு எங்களுடன் பழகிய கூகையே நீ வாயினால் ஒலிச் செய்து பலரை எடுப்புகின்றாய் . உன் வாய்க்கு சுவை உணவு அளிக்கின்றோம். கத்தாமல் இரு என்று வேண்டுகோள் விடுக்கிறாள். ஆட்டின் இறைச்சியுடன் நெய்யிட்ட வெண்சோற்றை தருவோம் . மேலும் வெள்ளெலிக் குட்டியின் சுட்ட சுவையான கறியும் தருகின்றோம் என்கின்றாள். அதுவும் நீ விரும்பி உண்ணுமாறு தருவோம் எனக் கூறுகின்றாள்.தொடக்கத்தில் ஊர் உண்ணும் நீரை வைத்து பொதுவான சுவை உணர்வை காட்டினார். பின்னர் கறிசோறு ஒட்டி வெள்ளெலியின் சுட்ட கறி என நெய் சுவையுடன் விரும்பத்தக்க வகையை காட்டினார். இவ்வகையில் மிக அழகாக சுவைப் படிமத்தைப் புலவர் வெளிப்படுத்தி உள்ளது பாராட்டத்தக்கதாக இருக்கின்றது.

**முகர்வுப் படிமம்**

மூக்கு என்னும் புலன் வழியான அனுபவத்தை விளக்கும் படிவம் முகர்வுப் படிமம் ஆகும். இதனை நேரடியாக உணர வைப்பதையும் உவமையான் வாயிலாக உணர வைப்பதையும் சங்க பாடல்களின் காணலாம். சான்றாக,

கடற் பாக்கம் என்னும் ஊர் கடன் சார்ந்த பாகமாகும். அங்கு மீனவர் வாழும் இடம் மீன், புலால் நாற்றமுடையது கடல் சார்ந்த மணல் வெளியில் தாழை மரங்கள் நிறைந்திருக்கும் காடை பூவின் மனம் புலால் நாற்றத்தை மாற்றியது என நுகர்வுப் படிமத்தை சித்தரிக்கிறது பின்வரும் பாடல் பகுதி,

*முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்,*
*தடந் தாட் தாழை முள்ளுடை நெடுந் தோட்டு*
*அக மடல் பொதுளிய முகை முதிர் வான் பூங்*
*கோடு வார்ந்தன்ன, வெண் பூத் தாழை*
*எறி திரை உதைத்தலின், பொங்கித் தாது சோர்பு,*
*சிறுகுடிப் பாக்கத்து மறுகு புலா மறுக்கும்*
*மணம் கமழ் கானல், இயைந்த நம் கேண்மை (நற்றிணை203:1-7)*

எனும் பாடற் பகுதியில் உலோச்சனார் நாற்றத்தின் மாற்றத்தை காட்டி முகர்வுப் படிமம் செய்துள்ளார்.இது போன்று ஓசைப் படிமம், உடல் இயக்க உணர்வுப் படிமம், உயிரியக்க உணர்வுப் படிமம், தன்னமைப்படிமம், அணிப் படிமம், ஆழ்ந்தப் படிமம், உவமைப் படிமம் , குறியீடுப் படிமம், ஒற்றைப் படிமம் இது போன்று பல்வேறு படிம வகைகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது.

**முடிவுரை**

சங்க அக இலக்கியங்களில் காட்சித் தன்மை உடைய பாடல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது படிமக் கூறுகள் ஆராயப்பட்டன. காட்சி,தொடு, உணர்வு, சுவை, முகர்வு, ஓசை ஆகிய படிமங்கள் நேரிடையாகவும் மறைமுகமாகவும் காட்சிப் படுத்தப்படும் சங்க அகப் பாடல்கள் விளக்கப்பட்டன.

**துணைநூற் பட்டியல்**

1. அப்துல் ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, அன்னம் பதிப்பகம், 2016.

2. அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம் சென்னை

3. அகத்தியலிங்கம், ச.,சங்கத்தமிழ், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.